# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 2008 டிசம்பர் திங்கள் 31 –ஆம் நாள் *புதன்* கிழமை காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

**முன்னிலை. திரு.ஜே.ஜேசையா அவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்.**

**வருகை புரிந்தோர்.** திருமதி.மேரி அல்போன்சாள், திரு.சுரேஷ், திரு.மரியஜாண், திருமதி.செலஸ்டினம்மாள், திரு.லியோன்ஸ், திரு.பிரான்ஸிஸ் அமலதாஸ், திரு.ராஜன், திரு.ஜாண் லோப்பஸ், திருமதி.ஜாண்சி, திரு.சூசைமரியான், திருமதி.லூர்துமேரி, திரு.முருகன், திரு.முனாப், திரு.நூர்முகம்மது, திருமதி சீதை ஆகியோர்.

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

<u>பொருள் எண் : 1</u>

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் *நவம்பர்* 2008–ம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 723 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 2</u>

இந்நகராட்சியில் 05.11.2008 முதல் 28.11.2008 முடிய செலவு செய்யப்பட்ட கீழ்க்கண்ட செலவினச் சீட்டுகள் மன்றத்தின் பார்வைக்கு.

(1) பொது நிதி : செலவுச்சீட்டு எண்கள் : **353**, 354, 355, 356, 357, 358, .359, 360, 361, 362, 363, 364, 365, 366, 367, 368, 372, 373, 374, 375, 376, 377, 378, 379, 380, 384.

<u>அ.குறிப்பு :</u> மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மானம் எண். 724 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 3</u>

இந்நகராட்சி அலுவலகத்தில் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களின் திருஉருவப்படம் பிரேம் போட்ட வகையில் ரு.500/- வழங்க கேட்டு ஸ்ரீஜா பிரேமிங் ஹால் உரிமையாளர் திரு. ராஜா அவர்கள். பட்டியல் சமர்ப்பித்துள்ளார். மேற்படி தொகையினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> - மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.10861/2008/அ2)

**தீர்மானம் எண். 725 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

<u>பொருள் எண் : 4</u>

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட மாதா காலனியில் 3.00 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலைத் தொட்டி கட்டப்பட்டு, தற்போது மாதா காலனி மற்றும் மரமடி பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது நிலவும் மின் தட்டுப்பாடு காரணமாக அலுவலக வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் பேருந்து நிலைய வளாகத்தில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் இருந்து சில பகுதிகளை நீக்கி அவற்றிற்கும் மாதாகாலனி மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து குடிநீர் விநியோகம் செய்தால் நகரில் தட்டுப்பாடு இன்றி குடிநீர் விநியோகம் செய்ய

இயலும். எனவே மாதா காலனி நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து ஈழக்காணி விளைக்கு ஒரு பகிர்மான குழாய் அமைத்து அத்துடன் இணைப்பதற்கும், துறைமுகத் தெருவில் ஒரு பகுதியினை இணைப்பதற்கு பகிர்மான குழாய் அமைப்பதற்கும், பர்னட்டிவிளை பிரதான சாலையில் பழுதடைந்துள்ள ஏர் வால்வு (Air valve) மாற்றும் பணியினைச் செய்வதற்கும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரு.1,60,000/-க்கும் நகர்மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

__அ.குறிப்பு__ : (1) பொருளில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்துப் பணிகளையும் செய்வதற்கும், அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரு.1,60,000.-க்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(2) செலவுத் தொகையினை நகராட்சி குடிநீர் திட்ட நிதியில் இருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண்.10982/08/அ2)

**தீர்மானம் எண். 726 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**__பொருள் எண் : 5__**

குளச்சல் நகரப் பகுதிகளில் நகராட்சி மன்றத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி அதிகாரிகளுடன் வார்டுகளில் மக்கள் சந்திப்புக்கு சென்றபோது நேரில் கண்டறியப்பட்ட குறைகளை நிவிர்த்தி செய்யும் பொருட்டு தெருவிளக்குகள் உள்ள மின்கம்பங்களில் உள்ள கிளாம்புகள் மற்றும் பைப்புகள் துருப்பிடித்து அதனை உபயோகப்படுத்த முடியாத நிலையில் உள்ளதால், அனைத்து மின்கம்பங்களிலும் புதிய பைப்புகள் மற்றும் கிளாம்புகள் மாட்ட வேண்டியுள்ளது. எனவே 3/4" G.I. பைப் 100 எண்ணம் வாங்குவதற்கும், G.I. கிளாம்பு செட் 300 ஜோடிகள் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி வாங்குவதற்கும், அதற்கான செலவுத் தொகை ரு.1,05,000/-க்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

__அ.குறிப்பு__ : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 10981/08/அ2)

**தீர்மானம் எண். 727 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**__பொருள் எண் : 6__**

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட மாலவிளை, வலியவிளை ஆகிய பகுதிகளில் நகராட்சி மன்றத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி அதிகாரிகளுடன் வார்டுகளில் மக்கள் சந்திப்புக்கு சென்றபோது நேரில் கண்டறியப்பட்ட குறைகளை நிவிர்த்தி செய்யும் பொருட்டு, சிமெண்ட் சாலைகள் பழுது வேலைகள் செய்வதற்கும், நடு கள்ளியடைப்பு சாலையில் ஓடையில் உள்ள பழுதுகளை சீரமைப்பதற்கும், மேற்படி வேலைகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரு.28,000/-க்கும் நகர்மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

__அ.குறிப்பு__ : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

(ந.க.எண். 10980/08/அ2)

**தீர்மானம் எண். 728 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**__பொருள் எண் : 7__**

இந்நகராட்சிக்குட்பட்ட சாஸ்தாங்கரை பகுதியில் சர்வே எண். P1-20/14 திரு. ஆறுமுகக்கண் நாடார் மகன் திரு. ராமச்சந்திரன் என்பவர் 1.581 சென்றும், (2) சர்வே எண். P1-21/7 -ல் திரு. பிரான்சிஸ் என்பவர் மகன் ஜாண் கிறிஸ்டோபர் என்பவர் 2.273 சென்றும், (3) சர்வே எண். P1-20/17 -ல் திரு. ஆறுமுகக்கண் நாடார் என்பவர்

மகன் திரு. செல்லத்துரை என்பவர் 1.729 சென்றும், (4) சர்வே எண். P1-21/6 -ல் திரு. முகம்மது ஹனிபா என்பவர் மகன் திரு.பீர்முகம்மது என்பவர் 0.890 சென்றும், (5) சர்வே எண். P1-20/15 -ல் திரு. கணேசன் என்பவர் மகன் திரு. சிவதாஸ் என்பவர் 1.00 சென்றும், (6) சர்வே எண். P1-21/9 -ல் திரு. தங்கராஜ் அவர்கள் மனைவி திருமதி. அல்போன்சாள் என்பவர் 1.00 சென்றும், (7) சர்வே எண். P1-20/5 -ல் திரு. நாராயணலடிலு அவர்கள் மனைவி திருமதி. ஹெப்சிபாய் என்பவர் 2.100 சென்றும், (8) சர்வே எண். P1-21/2 , 21/5 -ல் திரு. அமீர் உசைன் அவர்கள் மனைவி திருமதி. இஸ்மத் சுல்தானா என்பவர் 1.00 சென்றும் ஆகியோர்கள் சேர்ந்து தங்களுக்கு உரிய பட்டா நிலத்தில் உள்ள நடைபாதையை நகராட்சி பொது சாலைக்கு வேண்டி நகராட்சி ஆணையாளர் அவர்கள் பெயரில் தானமாக எழுதி கொடுத்துள்ளார்கள். மனுதாரர்களுக்குரிய பட்டா நிலத்தை நகராட்சியின் சொத்தாக எடுத்துக் கொள்ள மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அ.குறிப்பு</u> - மன்றம் ஏற்றுக் கொள்ளலாம்.

(ந.க.எண்.10433/2998/TPI)

**தீர்மானம் எண். 729 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி

# குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2008 டிசம்பர் திங்கள் 31 –ாம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்றது.

**முன்னிலை. திரு.ஜே.ஜேசையா அவர்கள், நகராட்சி மன்றத் தலைவர்.**

தலைவர்
குளச்சல் நகராட்சி மன்றம்

**<u>பொருள் எண் : 1</u>**

நகராட்சி மன்றத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி அதிகாரிகளுடன் வார்டுகளில் மக்கள் சந்திப்புக்கு சென்றபோது நேரில் கண்டறியப்பட்ட குறைகளை நிவிர்த்தி செய்யும் பொருட்டு, குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட பொட்டல் பாலத்தங்கரை சாலை மற்றும் சீம்பிளிவிளை சாலைகளில் குடிநீர் குழாயில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்ய மற்றும் சாலைகளில் தோண்டிய இடங்களில் காங்கிரீட் போட்டு மராமத்து பணியினை செய்யவும், ரு.18,000/-க்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : குடிநீர் பழுது மற்றும் மராமத்துக்கென கட்டணம் தனியே வசூலிக்கப்படுகிறது. எனவே குடிநீர் திட்டக் கணக்கிலிருந்து வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

(ந.க.எண். 1112/2008/அ2)

**தீர்மானம் எண். 730 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 2</u>**

நகராட்சி மன்றத் தலைவர், நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகராட்சி அதிகாரிகளுடன் வார்டுகளில் மக்கள் சந்திப்புக்கு சென்றபோது நேரில் கண்டறியப்பட்ட குறைகளை நிவிர்த்தி செய்யும் பொருட்டு, குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட ஆசாரிமார் தெருவில் பழுதடைந்துள்ள சாலைப் பகுதி மற்றும் ஓடையின் ஒரு பகுதியினை சரி செய்வதற்கு மதிப்பீட்டுத் தொகை ரு.15,000/-க்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**<u>அ.குறிப்பு</u>** : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்

(ந.க.எண். 1111/2008/அ2)

**தீர்மானம் எண். 731 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண் : 3</u>**

குளச்சல் நகராட்சி எல்கைக்குட்பட்ட 11 எண்ணம் ஆழ்துளை கிணறுகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.. பொது சுகாதாரம் மற்றும் கழிவுநீர் பரிசோதனை துறை, சென்னை மூலம் குடிநீர் மற்றும் பிளீச்சிங் பவுடர் மாதிரிகள் 15.10.2008-ல் எடுத்துச் செல்லப்பட்டு பரிசோதனை செய்து அதன் அறிக்கையினை 10.12.2008-ல் இந்நகராட்சியில் பெறப்பட்டுள்ளது. அதில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. பரிசோதனைக்காக குடிநீர் மாதிரிகள் (Water sample) எடுக்கப்படும் நாளன்று குடிநீரில் பிளீச்சிங் பவுடர் முறையாக உபயோகப்படுத்தப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது உபயோகப்படுத்தப்படும் பிளீச்சிங் பவுடரில் குளோரின் அளவு 7 சதவீதம் மட்டுமே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்போது குடிநீர் உபயோகத்திற்காக பிளீச்சிங் பவுடர் இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் இருந்து பெறப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் பரிசோதனை அறிக்கையில் மேற்படி பிளீச்சிங் பவுடரில் குளோரின் அளவு 7% மட்டுமே உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி பிளீச்சிங் பவுடர் குடிநீர் உபயோகத்திற்கு பயன்படுத்த ஏற்றதல்ல

எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் புதிதாக நல்ல தரமான BIS கிரேடு உள்ள, குளோரின் அளவு குறைந்தது 32சதவீதம் உள்ள பிளீச்சிங் பவுடர் புதிதாக வாங்கி பயன்படுத்த பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு பிளீச்சிங் பவுடரை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து வாங்கி குடிநீர் உபயோகத்திற்கு பயன்படுத்த அதற்கான உத்தேச செலவு ரு. 50,000/- -க்கு நகர்மன்ற ஒப்புதல் கோரப்படுகிறது.

__அ.குறிப்பு__ : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 1110/2008/அ2)

**தீர்மானம் எண். 732 : போதிய விளக்கம் பெறுவதற்கு, சுகாதார அதிகாரி மன்றக்கூட்டத்தில் ஆஜராகாததால் ஒத்திவைக்கப்பட்டது.**

**__பொருள் எண் : 4__**

குளச்சல் நகராட்சியில் குடிநீர் வினியோகம் செய்யும் கீழ்கண்ட வால்வுகள் அமைந்திருக்கும் பகுதியில் மழைக் காலங்களில் மண் நிரம்பி விடுவதால் வால்வுகளை திறக்க முடியாமல் உள்ளது. இதனால் குடிநீர் வினியோகம் பாதிப்படையும் சூழல் ஏற்படுகிறது. ஆகவே கீழ்கண்ட இடங்களில் வால்வு தொட்டிகள் அமைப்பதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(1) மாதா காலனி - 1 எண்ணம்
(2) பள்ளி ரோடு (க.எண். 20/103A) - 1 எண்ணம்
(3) புல்லன்விளை சந்திப்பு (க.எண். 29/70)- 1 எண்ணம்
(4) மேற்கு கடற்கரை சாலை
வெள்ளிப்பிள்ளையார் கோவில் சந்திப்பு- 2 எண்ணம்
(5) துறமுகத்தெரு - 1 எண்ணம்

மேற்படி வால்வு தொட்டிகளை அமைப்பதற்கு ரு. 65,000/- க்கும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

__அ.குறிப்பு__ : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 7995/2008/அ2)

**தீர்மானம் எண். 733 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**__பொருள் எண் : 5__**

நகராட்சிக்கு சொந்தமான அங்காடிகள், பேருந்து நுழைவு கட்டணம் வசூலித்தல், சந்தைகள், சைக்கிள் ஸ்டாண்ட் கட்டணம், கட்டணக் கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமைக்கான குத்தகை கால அளவை நடைமுறைகளில் உள்ள ஓராண்டிற்கு பதிலாக மூன்று ஆண்டுகளாக 2009-2010 முதல் கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு நிர்ணயித்து வெளியிடப்பட்டுள்ள அரசாணை எண். 181 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள் 19.09.2008 நகர்மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

__நிபந்தனைகள்__

(1) ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாம் ஆண்டில் 5 சதவீதம் குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5 சதவீதம் குத்தகை தொகை உயர்வும் செய்யலாம்.

(2) மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை குத்தகை இனங்களை பொது ஏலத்தில் விடப்பட வேண்டும்.

(3) மூன்றாண்டு கால அளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்கும் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரர் காலமானால் அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரர்களாக அவ்வுரிமத்தை பெறலாம். வாரிசுதாரர்களுக்கு விருப்பம் இல்லையெனில் உரிமை மறுஏலம் விடப்படும்.

(4) குத்தகை விடுவது சம்மந்தமாக ஏற்கெனவே நடைமுறையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் பொருந்தும்.

அ.குறிப்பு -
(1) மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
(2) அரசாணையின்படி, குத்தகை அறிவிக்கையில் குத்தகை நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை திருத்தம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.11062/2008/அ2)

**தீர்மானம் எண். 734 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

**பொருள் எண் : 6**

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட குத்தகை இனங்களை அனுபவித்துக் கொள்ளும் உரிமங்களுக்கான குத்தகை காலம் 31.03.2009 வுடன் முடிவடைவதால் 2009-2010 முதல் 2011-2012 முடிய 3 ஆண்டுகளுக்கு அரசாணை எண். 181 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை) நாள் 19.09.2008.-ல் தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும், பொது ஏல அறிக்கை மற்றும் சிறப்புக் கட்டுப்பாடுகள் மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஏல விபரம் | செலுத்த வேண்டிய முன்வைப்புத் தொகை ரூ. | குத்தகை காலம் |
|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் தினசரி மற்றும் வாரச் சந்தையில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 3,00,000 | 1.4.2009 முதல் 31..3.2012 முடிய. |
| 2 | இந்நகராட்சி பகுதியில் இருந்து வெளியே கொண்டு செல்லும் மீன்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 25,000 | 1.4.2009 முதல் 31..3.2012 முடிய. |
| 3 | இந்நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலையத்தில் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 75,000 | 11.4.2009 முதல் 31..3.2012 முடிய.. |
| 4 | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் உள்ள பெருந்தலைவர் காமராசர் பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம் | 15,000 | 1.4.2009 முதல் 31..3.2012 முடிய. |
| 5 | இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட அண்ணா சிலை சமீபம் உள்ள நகராட்சி கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் செய்யும் உரிமம். | 1,000 | 1.4.2009 முதல் 31..3.2012 முடிய. |

**அ.குறிப்பு :** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்.11062/2008/அ2)

**தீர்மானம் எண். 735 : அலுவலக குறிப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.**

நகர்மன்றத் தலைவர்
குளச்சல் நகராட்சி